DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.22**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | குமார் |
| Father Name | : | ராமமூர்த்தி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 6, 8, 10, 13, 14, 15, 16, மற்றும் 17 எதிரிகள் ஆஜர். 5, 9, 12 மற்றும் 18 எதிரிகள் ஆஜர் இல்லை. 5, 9, 12 மற்றும் 18 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது 24/9 ஸ்டேட் பாங்க் அலுவலர் 2வது காலனி, பைபாஸ் ரோடு, மதுரை என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மேலவெளிவீதியில் கதவு எண்.32A, விலாசத்தில் சங்கீத் என்ற பெயரில் ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவர் எனது ஹோட்டலில் வார வாரம் 150 பேருக்கு சாப்பாடு ஆர்டர் கொடுத்து ஆசிரமத்திற்கு அவர்களுடைய எடுத்துச்செல்வார்கள். அதில் அவரிடம் பழக்கம் ஏற்பட்டது. எனக்கு ஒருநாள் அவர் போன் செய்து வெளியூர் போக வேண்டும் என்று சொல்லி எனது காரை அவருடைய வீட்டிற்கு எடுத்து வரச்சொன்னார். நான் அவர் சொன்னதன் பேரில் 29.01.2013ம் தேதி மாலை 06.00 மணியை போல் அவருடைய வீட்டிற்கு சென்றேன். பின்னர் அவரை ஏற்றிக்கொண்டு பைபாஸ் ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுவிட்டு அரை மணிநேரம் அங்கு காத்திருந்தோம். அதன் பிறகு அன்றைய

தினம் இரவு 10.30 மணி அளவில் கொடைக்கானல் சென்று அங்குள்ள கால்டன் ஹோட்டலில் அறை எடுத்து தங்கினோம். அங்கு இரண்டு நாட்கள் தங்கிவிட்டு, 31.01.2013ம் தேதி கொடைக்கானலில் இருந்து மதுரைக்கு புறப்பட்டு மதியம் 01.30 மணியளவில் அவருடைய வீட்டில் இறக்கிவிட்டு நான் சென்றுவிட்டேன். அன்று இரவு 08.30 மணியளவில் பொட்டு சுரேஷ் அவர்கள் கொலைசெய்யப்பட்டதாக டிவி பார்த்து தெரிந்துகொண்டேன். மறுநாள் காலை சுமார் 10.30 மணியளவில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சென்று அங்கு கூட்டமாக இருந்தது, கொஞ்ச நேரம் நின்றுவிட்டு வந்துவிட்டேன். அதன் பிறகு கீரைத்துறை மயான கரைக்கு சென்றுவிட்டேன். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.03 17:12:16 +0530